SRI LANKA
IMMIGRATION AND EMIGRATION

திகதி: 2022.05.16

இல: 26

# ஊடக அறிவித்தல்

# குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் ஒரு நாள் சேவை மற்றும் சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் 2022.05.17 ஆம் திகதி முதல் வழமைப் போன்று நடைபெறும். இந்தச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முன்கூட்டியே திகதியையும் நேரத்தையும் ஒதுக்கிக்கொண்டு வருகைத்தருவது கட்டாயமாகும். அதற்காக www.immigration.gov.lk எனும் இணையத்தளத்தையோ அல்லது 0707101060 எனும் தொலைபேசி இலக்கத்தையோ பயன்படுத்துமாறு அறியத்தருகின்றேன். தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதாயின் கடமை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை அதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

திணைக்களத்தின் கடவுச்சீட்டு விநியோக இயலளவு நாளொன்றுக்கு 2000 என்பதனால், முன்கூட்டியே திகதியையும் நேரத்தையும் ஒதுக்கிக்கொண்டு வருகைத்தருவதன் மூலம் ஏற்படும் அசௌகரியத்தை தவிர்க்க முடியும்.

கடவுச்சீட்டுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படும் மற்றும் கடவுச்சீட்டுக்களின் கையிருப்பு முடிவடையும் என்பது தொடர்பில் பரவும் வதந்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது. தங்களுக்காக சேவை வழங்க எமது திணைக்களத்தின் ஊழியர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர் என்பதை தயவன்புடன் அறியத்தருகின்றேன்.

**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**